முழுப்பதிப்புரிமையுடையது


அந்தரங்கமானது

# இலங்கை பரீட்சைத் திணைக்களம்

## க.பொ.த. (சாதாரண தர)ப் பரீட்சை - 2023 (2024)

# 16 — இஸ்லாம்

## புள்ளியிடும் திட்டம்



இந்த விடைத்தாள் பரீட்சகர்களின் உபயோகத்துக்காகத் தயாரிக்கப்பட்டது. பிரதம பரீட்சகர்களின் கலந்துரையாடல் நடைபெறும் சந்தர்ப்பத்தில் பரிமாறிக்கொள்ளும் கருத்துக்களுக்கிணங்க, இதில் உள்ள சில விடயங்கள் மாறலாம்.

இறுதித் திருத்தங்கள் உள்ளடக்கப்படவுள்ளன.

# இலங்கை பரீட்சைத் திணைக்களம்
## க.பொ.த (சாதாரண தர)ப் பரீட்சை – 2023 (2024)
## 16 – இஸ்லாம்

### இஸ்லாம் I

**1 ஆம் வினாத்தாள் 40 வினாக்கள் 1x40=40 புள்ளிகள்**

### இஸ்லாம் II

**1 ஆம் வினா கட்டாயமானது**

**ஒவ்வொரு பிரிவுக்கும் 2 புள்ளிகள் விதம் பத்து வினாக்கள் 2x10=20 புள்ளிகள்**

**2 முதல் 7 ஆம் வினாக்கள்**

**தெரிவு செய்யப்பட்ட 4 வினாக்களுக்கு 4x10=40 புள்ளிகள்**

**மொத்தம் -100 புள்ளிகள்**

**பகுதி வினாக்களுக்கான புள்ளிகள்**
**2ம் வினாவிலிருந்து 6ஆம் வினா வரை**

i. பகுதி 02 புள்ளிகள்
ii. பகுதி 03 புள்ளிகள்
iii. பகுதி 05 புள்ளிகள்

10 புள்ளிகள்

**07 ஆம் வினாவில் தெரிவு செய்த இரு பகுதிகளுக்கு**

i. பகுதி 05 புள்ளிகள்
ii. பகுதி 05 புள்ளிகள்

10 புள்ளிகள்

| | |
|---|---|
| வினாத்தாள் I மொத்தம் | 40 புள்ளிகள் |
| வினாத்தாள் II மொத்தம் | 60 புள்ளிகள் |
| | 100 புள்ளிகள் |

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

රහසයයි
அந்தரங்கமானது

## අ.පො.ස. (සා.පෙළ) විභාගය - 2023 (2024)
## க.பொ.த. (சா.தர)ப் பரீட்சை - 2023 (2024)

විෂය අංකය / பாட இலக்கம்: **16**

විෂයය / பாடம்: **இஸ்லாம்**

### I පත්‍රය - පිළිතුරු
### I பத்திரம் - விடைகள்

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරෙහි අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරෙහි අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරෙහි අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරෙහි අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 1 | 11. | 2 | 21. | 2 | 31. | 4 |
| 02. | 2 | 12. | 3 | 22. | 2 | 32. | 4 |
| 03. | 3 | 13. | 2 | 23. | 4 | 33. | 4 |
| 04. | 4 | 14. | 2 | 24. | 1 | 34. | 3 |
| 05. | 2 | 15. | 1 | 25. | 3 | 35. | 1 |
| 06. | 4 | 16. | 2 | 26. | 4 | 36. | 1 |
| 07. | 1 | 17. | 4 | 27. | 1 | 37. | 2 |
| 08. | 2 | 18. | 3 | 28. | 1 | 38. | 3 |
| 09. | 2 | 19. | 3 | 29. | 4 | 39. | 1 |
| 10. | 3 | 20. | 1 | 30. | 3 | 40. | 3 |

විශේෂ උපදෙස් / விசேட அறிவுறுத்தல் } එක් පිළිතුරකට ලකුණු / ஒரு சரியான விடைக்கு **01** බැගින் / புள்ளி வீதம்

මුළු ලකුණු / மொத்தப் புள்ளிகள் 01 × 40 = 40

පහත නිදසුනෙහි දක්වෙන පරිදි බහුවරණ උත්තරපත්‍රයේ අවසාන තීරුවේ ලකුණු ඇතුළත් කරන්න.
கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் உதாரணத்திற்கு அமைய பல்தேர்வு வினாக்களுக்குரிய புள்ளிகளை பல்தேர்வு வினாப்பத்திரத்தின் இறுதியில் பதிக.

නිවැරදි පිළිතුරු සංඛ්‍යාව / சரியான விடைகளின் தொகை: 25 / 40

I පත්‍රයේ මුළු ලකුණු / பத்திரம் I இன் மொத்தப்புள்ளி: 25 / 40

**1.** சுருக்கமான விடை எழுதுக.

(i) நஜீஸான பிராணியாக இருந்தாலும், அதை வதை செய்வதற்கு இஸ்லாம் தடை விதித்துள்ள இரண்டு பிராணிகளைக் குறிப்பிடுக.

- நாய், பன்றி

(2 புள்ளிகள்)

- பஜ்ர் (சுபஹ்), வித்ர் தொழுகை

(2 புள்ளிகள்)

(ii) ஷாபி மத்ஹபின் அடிப்படையில், குனூத் ஓதுவது ஸுன்னத்தாக்கப்பட்ட இரண்டு தொழுகைகளைத் தருக.

(iii) 'பய்அதுஷ் ஷஜரா' என்னும் ஒப்பந்தத்தின் மற்றொரு பெயர் என்ன?

- பைஅது ரிழ்வான் (2 புள்ளிகள்)

(iv) இஸ்லாமிய கலைகளில் முதலில் தோன்றிய கலையைக் கூறி, அக்கலையின் பொற்காலம் எதுவென்பதையும் குறிப்பிடுக.

- பிக்ஹ்க் கலை – தபஉத் தாபிஈன்கள் காலம் (2 புள்ளிகள்)

(v) அபூபக்ர் (ரழி) அவர்களுக்கு 'அஸ்ஸித்திக்' என்னும் சிறப்புப் பெயர் வழங்கக் காரணம் யாது?

- மிஃராஜின் போது நபி (ஸல்) அவர்களை உண்மைப்படுத்தியமை.

(2 புள்ளிகள்)

(vi) கலீபா உஸ்மான் (ரழி) அவர்களின் முக்கிய பணிகளில் இரண்டைக் குறிப்பிடுக.

- ஹி. 27 இல் முஆவியா (ரழி) இன் உதவியுடன் கடற்படை உருவாக்கியமை.
- அல்குர்ஆனை பாதுகாத்தமை. (8 பிரதிகள் செய்து முக்கிய நகர்களுக்கு அனுப்பி 'மக்களை அல்குர்ஆனின் பால் ஒன்று படுத்தியமை).
- ஆட்சியை விஸ்தரிப்பு செய்தமை. (அலெக்ஸாந்திரியா, எகிப்தின் தென்பகுதி, துனூஸியா,மொரோக்கோ, மத்தியதரைக் கடல் தீவுகள், பாரசீகப் பிரதேசங்கள்)
- அரசியல் நிருவாக ரீதியான சீர்திருத்தங்கள்.
- அபிவிருத்திப் பணிகள் மேற்கொண்டமை. மஸ்ஜிதுல் ஹரம் மற்றும் மஸ்ஜிதுந்நபவியை விசாலமாக்கியமை. கால்வாய்கள், பாதைகள், பொதுக்கிணறுகள் அமைத்தல்

(2 புள்ளிகள்)

(vii) இலங்கை முஸ்லிம்களின் ஆரம்பகாலக் குடியேற்றங்கள் இடம்பெற்ற நகரங்களில் இரண்டைத் தருக.

(2 புள்ளிகள்)

- பேருவலை, காலி, கொழும்பு, மாத்தறை.

(viii) இஸ்லாம் வழங்கியுள்ள மனித உரிமைகளில் இரண்டைக் குறிப்பிடுக.

- உயிர் வாழும் உரிமை
- தனி மனித சுதந்திரத்திற்கான உரிமை
- சொத்துக்களை பாதுகாக்கும் உரிமை
- மத உணர்வுகளுக்கு பாதுகாப்பு வழங்கும் உரிமை
- நீதி கோரும் உரிமை
- சமத்துவ உரிமை
- கண்ணியத்தை பாதுகாக்கும் உரிமை (2 புள்ளிகள்)

(ix) நிரந்தர மஹ்ரம் ஏற்படுவதற்கான காரணிகளில் இரண்டைக் குறிப்பிடுக.

- இரத்த உறவு முறை
- பால்குடி உறவு முறை
- திருமண உறவு முறை (2 புள்ளிகள்)

(x) ஒரு சிலர் உழைப்பதில் அசிரத்தையாக இருப்பதற்கான காரணங்கள் என இமாம் மாவர்தி குறிப்பிடும் காரணங்களில் இரண்டைத் தருக.

- சோம்பல்
- தவக்குல் பற்றிய பிழையான அபிப்பிராயம்
- பற்றின்மையும் மனத்திருப்தியும். (2 புள்ளிகள்)

(10 x 2 = 20 புள்ளிகள்)

2. (i) ஷிர்க்கின் பிரதான பிரிவுகள் இரண்டையும் உதாரணங்களுடன் தருக.

- ஷிர்க் இரண்டு வகைப்படும்.

**1. ஷிர்க் அக்பர் (பெரியது)**

- பெரிய ஷிர்க்குள் அடங்குபவை
  - அல்லாஹ் அல்லாதவற்றை வணங்குதல்
  - அல்லாஹ்வுக்காக மட்டும் செய்யப்பட வேண்டிய வணக்கங்களை வேறு ஒருவருக்காக செய்தல்.
    - உ–ம்:- வணங்குதல், பிரார்த்தித்தல், நேர்ச்சை வைத்தல், அறுத்துப்பலியிடல்...

**2. ஷிர்க்குல் அஷ்கர் – சிறிய வகை ஷிர்க்**

- அல்லாஹ் அல்லாதவற்றைக் கொண்டு சத்தியம் செய்தல்.
- நூல், வளையம் போன்றவற்றைக் கட்டுதல்.
- தாயத்து கட்டுதல்.
- மந்திரித்தல்.
- சூனியம், வசியம்.
- குறி, சாஸ்திரம், சகுனம் பார்த்தல்
- முகஸ்துதி (ரியாஉ)

**(இரண்டு வகைகளும் ஒவ்வொரு உதாரணத்துடன் குறிப்பிடப்பட்டிருப்பின்**
**1 x 2 = 2 புள்ளிகள்)**

(ii) ஈமானைப் பாதிக்கும் விடயங்களில் மூன்றைச் சுருக்கமாக விளக்குக.

- ஈமானைப் பாதிக்கும் அம்சங்களாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1. **இல்ஹாத்** – நாத்திகவாதத்தைக் குறிக்கும்.

   இஸ்லாமிய வழக்கில், இப்பிரபஞ்சமும் அதிலுள்ள அனைத்தும் தானாக தோன்றியது அது படைக்கப்படவில்லை. படைப்புக்கள் தம்மைத்தாமே தோற்றுவித்துக் கொண்டன என்ற சிந்தனையைக் குறிக்கும்.

2 **ஷிர்க்:** இணைவைத்தல், கூட்டுச் சேர்த்தல், பங்குகொடுத்தல் போன்ற கருத்துக்களைத் தரும்.

   இஸ்லாமிய வழக்கில், அல்லாஹ்வின் தெய்வீகத்தன்மையில் எவருக்கேனும், எச்சக்திக்கேனும் பங்குண்டு என நம்புதல் அல்லது அந்நம்பிக்கையை பிரதிபளிக்கும் வகையில் எச்செயலையேனும் செய்தலைக் குறிக்கும்.

3 **குப்ர்:** மொழியில் மறைத்தல், மூடுதல் போன்ற கருத்துக்களைத் தரும்.

இஸ்லாமிய வழக்கில், இஸ்லாத்தின் நம்பிக்கைகளையும் திட்டவட்டமாக அறியப்பட்ட அதன் செயன்முறைகளையும் நிராகரிப்பதைக் குறிக்கும்.

4 **ரித்தத்:** மீளுதல், திரும்பிவிடுதல் போன்ற கருத்துக்களைத் தரும். இஸ்லாமிய வழக்கில், ஒரு முஸ்லிம் தன்னை காபிராகக்கூடிய வார்த்தைகளை மொழிவதன் மூலம் அல்லது செய்வதன்மூலம் இஸ்லாத்தை விட்டு நீங்கிவிடுவதைக் குறிக்கும்.

**(மேலுள்ள விடயங்களுள் மூன்றை சுருக்கமாக விளக்கியிருப்பின் 1 x 3 = 3 புள்ளிகள்)**

(iii) தொழுகையில் பேணுதலாக இருக்கும் ஒரு மு.ீமின் பெறும் பயன்களில் ஐந்தைச் சுருக்கமாக விளக்குக.

- இறைவனுடன் உரையாடும் சந்தர்ப்பமாக அமைதல்.
- இறை சிந்தனையும் உள அமைதியும் ஏற்படல்.
- இறையருள் கிட்டுதல்.
- சுவனத்தின் திறவுகோலாய் அமைதல்.
- உறுதிமிக்க மனநிலையும் தயாள சிந்தனையும் ஏற்படல்.
- பாவச் செயல்களிலிருந்து தடுத்தல்.
- பாவமன்னிப்பைப் பெற்றுத்தரல்.
- மறுமையில் சாட்சியாய் அமைதல்
- அக – புற சுத்தத்ததை ஏற்படுத்தல்
- நரகை விட்டும் பாதுகாக்கும்.

**(இவை போன்ற ஐந்து விடயங்கள் சுருக்கமாக விளக்கப்பட்டிருப்பின் 1 x 5 = 5 புள்ளிகள்)**

**(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)**

**3.** (i) நபி (ஸல்) அவர்களால் சுவர்க்கத்திற்கு நன்மாராயம் கூறப்பட்ட பத்து ஸஹாபாக்களுள் இருவரின் பெயர்களைக் குறிப்பிடுக.

- அபூபக்கர் (ரழி)
- உமர் (ரழி)
- உஸ்மான் (ரழி)
- அலி (ரழி)
- தல்ஹா இப்னு உபைதுல்லாஹ் (ரழி)
- ஸுபைர் இப்னு அவ்வாம் (ரழி)
- அப்துர் ரஹ்மான் இப்னு அவ்ப் (ரழி)
- ஸஅத் இப்னு அபீ வக்காஸ் (ரழி)
- ஸயீத் இப்னு ஸைத் (ரழி)
- அபூ உபைதா இப்னு அல் ஜர்ராஹ் (ரழி)

**(மேலே குறிப்பிடப்பட்டவர்களுள் இருவரது பெயர் குறிப்பிடப்பட்டிருப்பின்**
**1 x 2 = 2 புள்ளிகள்)**

(ii) 'ஸிஹாஹுஸ் ஸித்தா' என்று அழைக்கப்படும் ஆறு ஹதீஸ் கிரந்தங்களின் பெயர்களையும் எழுதுக.

- ஸஹீஹ் புஹாரி
- ஸஹீஹ் முஸ்லிம்
- ஸுனன் அபூதாவுத்
- ஜாமிஉத் திர்மிதி
- ஸுனன் நஸாஈ
- ஸுனன் இப்னு மாஜா

**(மேலே குறிப்பிடப்பட்ட கிரந்தங்களது பெயர்கள் குறிப்பிடப்பட்டிருப்பின்**
**½ x 6 = 3 புள்ளிகள்)**

(iii) 'ஸுன்னா' என்றால் என்ன என்பதைக் குறிப்பிட்டு, அதற்குக் கட்டுப்பட வேண்டும் என்பதற்கான அல்குர்ஆன், ஹதீஸ் ஆதாரங்கள் ஒவ்வொன்று வீதம் தருக.

- **மொழியில் :** வழிமுறை
- **இஸ்லாமிய வழக்கில்** : நபி (ஸல்) அவரவ்களது வாழ்வையும் வாக்கையும் குறிக்கும்.

**அல்குர்ஆன் ஆதாரம் :**

- எவர் தூதருக்கு கட்டுப்பட்டு நடக்கின்றாறோ அவர் நிச்சயமாக அல்லாஹ்வுக்கு வழிப்பட்டவராவார்". (4:80)
- நம்முடைய தூதர் உங்களுக்குக் கொடுத்ததை மனமுவந்து எடுத்துக்கொள்ளுங்கள். அவர் எதை விட்டும் உங்களைத் தடுத்தாரோ அதைவிட்டு நீங்கள் விலகிக்கொள்ளுங்கள்". (59:07)

**ஹதீஸ் ஆதாரம் :**

- நான் உங்களிடம் இரண்டை விட்டுச்செல்கிறேன். அவற்றை நீங்கள் பின்பற்றும் காலமெல்லாம் வழிதவற மாட்டீர்கள் ஒன்று அல்குர்ஆன் மற்றது எனது ஸுன்னா (முவத்தா)
- எனக்கு வழிப்பட்டவன் சுவனம் புகுவான். மாறு செய்தவன் நிராகரித்துவிட்டான்" (பைஹகி)

**(ஸுன்னாவுக்கான வரைவிலக்கனத்துக்கு 1 புள்ளியும் அல்குர்ஆன் மற்றும் ஹதீஸ் ஆதாரங்கள் ஒவ்வொன்றுக்கும் இரண்டு புள்ளிகளுமாக 1 + 2 +2 = 5 புள்ளிகள்)**

**(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)**

**4.** (i) வரலாற்றில் தோன்றிய போலி நபிமார்களில் இருவரின் பெயர்களைத் தருக.

- முஸைலமா
- அஸ்வதுல் அன்ஸி
- துலைஹா
- ஸஜா
- மிர்ஸா குலாம் அஹ்மத்

**(மேலே குறிப்பிடப்பட்டவர்களுள் இருவர் குறிப்பிடப்பட்டிருப்பின் 1 x 2 = 2 புள்ளிகள்)**

(ii) நோன்பினால் ஏற்படும் இம்மை மறுமைப் பயன்களில் மூன்று வீதம் குறிப்பிடுக.

**இம்மைப் பயன்கள்**

- ஏழைகளின் துயரத்தை உணர்தல்
- நோய்களிலிருந்து பாதுகாப்பு
- அல்லாஹ்வின் அருட்கொடைகளை உணர்தல்.
- பொறுமைக்கான பயிற்றுவிப்பு
- பாவங்களிலிருந்து பாதுகாப்பு
- உடல் ஆரோக்கியம்

**மறுமைப் பயன்கள்**

- சுவன வாயில்கள் திறக்கப்படல், சுவனம் அலங்கரிக்கப்படல்.
- நரக வாயில்கள் மூடப்படல், ஷைத்தான்கள் விலங்கிடப்பல்.
- மலக்குகள் நோன்பாளிக்காக மன்னிப்பு கோரல், பாவங்கள் மன்னிக்கப்படல்.
- துஆக்கள் ஏற்றுக்கொள்ளப்படல்.
- நரக விடுதலை கிடைத்தல்.
- இறை அருளை உணருதல்.
- எண்ணற்ற கூலிகளைப் பெறல்.

- மறுமையில் மன்றாடல்.

(இவைபோன்ற இம்மை, மறுமைப் பயன்கள் மும்மூன்று குறிப்பிடப்பட்டிருப்பின் ½ x 6 = 3 புள்ளிகள்)

(iii) புனித க.்பாவின் வரலாற்றைச் சுருக்கமாக விளக்குக.

- உலகில் முதன்முதலில் கட்டப்பட்ட இறை இல்லமாகும். முதலில் கட்டியது மலக்குகள். பின்னர் ஆதம் (அலை) கட்டியமை.
- இஸ்லாத்தில் முதல் அந்தஸ்தைப் பெற்ற மஸ்ஜிதாக காணப்படுகின்றமை.
- அதில் நிறைவேற்றப்படும் ஒரு தொழுகை ஒரு இலட்சம் தொழுகைகளுக்கு சமமாக கருதப்படுகின்றமை.
- நூஹ் (அலை) காலத்து வெள்ளத்தில் சிதைவுற்று வெறும் மணல் திட்டாக காணப்பட்டமை.
- பின்னர் அல்லாஹ்வின் கட்டளைப்படி இப்றாஹிம் (அலை) பலஸ்தீனிலிருந்து மக்காவுக்கு வருகை தந்து இஸ்மாஈல் (அலை) உடன் இணைந்து மீளக்கட்டியமை.
- இவருக்குப்பின்னர் 2000 வருடங்களின் பின்பு குஸாஆ கோத்திரத்தைச் சேர்ந்த அம்ர் இப்னு லுஹை மூலம் கஃபாவில் சிலை வணக்கம் அறிமுகம் செய்யப்பட்டமை.
- அப்துல் முத்தலிப் கனவில் ஸம்ஸம் கிணறு இருக்கும் இடத்தை கண்டு பிடித்தமை.
- இவரது காலத்தில் அப்றஹாவின் யானைப்படை கஃபாவை அழிக்க வந்தபோது அல்லாஹ் அதனை நிர்மூலமாக்கியமை.
- இதன் பின்னர் 30 வருடங்களின் பின்னர் நபி (ஸல்) காலத்தில் கஃபா மீண்டும் புனர்நிர்மாணம் செய்யப்பட்டமை.
- பைத்துல் முகத்தஸை நோக்கி தொழுது வந்த முஸ்லிம்களை நபியின் பேரவாவின் காரணமாக (அல்லாஹ்வின் கட்டளைப்படி) கஃபாவை நோக்கி தொழ அனுமதி வழங்கப்பட்டமை.
- மக்கா வெற்றிகொண்ட பின்னர் முஹம்மத் (ஸல்) அவர்கள் கஃபாவின் உட்புறத்தில் காணப்பட்ட சிலைகளை தகர்த்து சுத்தப்படுத்தியமை.

(இவைபோன்ற ஐந்து கருத்துக்கள் சுருக்கமாக விளக்கப்பட்டிருப்பின் 1 x 5 = 5 புள்ளிகள்)

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

5. (i) ஸக்காத் பெறுவதற்கு தகுதியற்றவர்களில் இரு பிரிவினர்களைக் குறிப்பிடுக.

- போதிய வருமானமுள்ளவர்கள்
- அடிமைகள்
- நபிவர்களது குடும்பம்
- ஸக்காத் கொடுப்பவரது தாபரிப்பின் கீழ் இருப்போர்.
- முஸ்லிம் அல்லாதார்.

**(மேலே குறிப்பிடப்பட்டவர்களுள் இருவர் குறிப்பிடப்பட்டிருப்பின்**
**1 x 2 = 2 புள்ளிகள்)**

(ii) ஸூறா லுக்மானில் குறிப்பிடப்பட்டுள்ள நற்பண்புகளில் மூன்றைக் குறிப்பிடுக.

- அல்லாஹ்வுக்கு இணைவைக்க வேண்டாம்.
- தொழுகையை நிலை நிறுத்துங்கள்.
- நன்மையை ஏவி தீமையை தடுங்கள்.
- துன்பங்களின் போது பொறுமையைக் கைக்கொள்ளுங்கள்.
- மனிதர்களை விட்டும் உங்கள் முகங்களை திருப்ப வேண்டாம்.
- பூமியில் பெருமையோடு நடக்க வேண்டாம்.
- நடையில் நடுநிலையான தன்மையை கையாளுங்கள்.
- சப்தத்தை தாழ்த்திக் கொள்ளுங்கள்.

**(மேலே குறிப்பிடப்பட்டவற்றுள் மூன்று நற்பண்புகள் குறிப்பிடப்பட்டிருப்பின்**
**1 x 3 = 3 புள்ளிகள்)**

(iii) ஸஹாபாக்கள் தொடர்பான அஹ்லுஸ் ஸுன்னா வல்ஜமாஆவின் அகீதாவைச் சுருக்கமாக விளக்குக.

- நபித் தோழர்களான இவர்கள் முஃமின்களில் உயர்ந்தவர்கள்.
- நபிமார்களுக்கு அடுத்த நிலையில் உயர் ஸ்தானத்தில் இருப்பவர்கள்.
- இவர்களுள் சுவனத்தைக் கொண்டு சுபசெய்தி கூறப்பட்ட பல நபித் தோழர்கள் உள்ளனர்.
- அஹ்லுல் பைத் எனும் நபி (ஸல்) அவர்களின் குடும்பத்தையும் நபி (ஸல்) அவர்களின் மனைவிகளான உம்மஹாதுல் முஃமின்களையும் கௌரவப்படுத்துவதும் அவர்கள் மீது அன்பு கொள்வதும் அவசியமானவை.
- ஸஹாபாக்கள் அனைவரும் நம்பிக்கையும் நாணயமும் உடையவர்கள்.
- அவர்களைக் குறைகாண்பதும் விமர்சிப்பதும் பாவமாகும்.

**(இவைபோன்ற ஐந்து கருத்துக்கள் சுருக்கமாக விளக்கப்பட்டிருப்பின் 1 x 5 = 5 புள்ளிகள்)**
**(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)**

6. (i) நான்கு முஸ்லிம்களை வணிக ஆலோசகர்களாக நியமித்த பொலன்னறுவை காலப் பிரிவைச் சேர்ந்த மன்னன் யார்?

- மகா பராக்கிரமபாகு மன்னன்

**(2 புள்ளிகள்)**

(ii) இஸ்லாம் இலங்கையில் அறிமுகமாவதற்கு முன்பே அரேபியர்கள் இலங்கையை தங்கு தளமாகப் பயன்படுத்தியமைக்கு ஏதுவான காரணங்களில் **மூன்றைக்** குறிப்பிடுக.

அரபிகளது வர்த்தகப் போக்குவரத்துப் பாதையில் இலங்கை காணப்பட்டமை.

- காற்று வீசும் திசை இலங்கைக்கு சாதகமாக இருந்தமை.
- சுத்தமான குடிநீர் மற்றும் உணவு வசதிகள் காணப்பட்டமை.
- இயற்கை துறைமுக வசதிகள் காணப்பட்டமை
- கப்பல்களை பழுதுபார்க்கும் வசதிகள் காணப்பட்டமை.
- அரபிகளது சர்வதேச வர்த்தகத்துக்குத் தேவையான வர்த்தகப் பொருட்கள் காணப்பட்டமை
- ஆதம் மலையை தரிசிக்க வருகை தந்தமை.

**(இவைபோன்ற மூன்று விடயங்கள் குறிப்பிடப்பட்டிருப்பின் 1 x 3 = 3 புள்ளிகள்)**

(iii) 'இஸ்லாமிய அடிப்படைக் கடமைகள் எவ்வாறு நல்லொழுக்கங்களின் பால் ஈர்க்கப்படுவதற்கு பயிற்றுவிக்கின்றன' என்பதைச் சுருக்கமாக விளக்குக.

- இஸ்லாமியக் கடமைகள் என்பது கலிமா, தொழுகை, ஸகாத், நோன்பு, ஹஜ் என்பனவாகும். இவை ஒவ்வொன்றும் மனிதனை பின்வரும் வகையில் நல்லொழுக்கத்தின்பால் பயிற்றுவிக்கின்றன.
- **தொழுகை:** ஒவ்வொரு முஸ்லிமும் அவசியம் நிறைவேற்ற வேண்டிய கடமையாகும். உயிரோட்டத்துடன் தொழுகின்ற மனிதன் தன் தொழுகை மூலம் நல்லொழுக்கத்தையும் நன்னடத்தையையும் ஏற்படுத்தும்,
  "...நிச்சயமாக தொழுகையானது மானக்கேடான தீய காரியங்களில் இருந்தும் (மனிதனை) விலக்கிவிடும்..." (அல்குர்ஆன்)
- **ஸக்காத்:** இதனை நிறைவேற்றும் ஒருவனிடம், வறிய மக்கள் மீது அன்பும், அவர்களுக்குக் கொடுத்துதவ வேண்டும் என்ற தயாள சிந்தையும் உருவாகின்றது. உலோபித் தனம் அவனை விட்டும் அகன்று விடுகிறது. அத்துடன் அவனது உள்ளம் உலக ஆசை எனும் அசுத்தத்தில் இருந்து தூய்மை பெறுகிறது.
  "அவர்களுடைய பொருளை தானமாக எடுத்துக்கொண்டு, அவர்களைப் பரிசுத்தமாக்கி வைத்து அதைக் கொண்டு அவர்களைத் தூய்மைப்படுத்தி அவர்களுக்காகப் பிரார்த்தனை செய்யுங்கள்..." (அல்குர்ஆன்)

- **நோன்பு:** உள்ளத்தில் இருந்து எழுகின்ற ஆசைகளையும் தீய உணர்வுகளையும் கட்டுப்படுத்தி இறையச்சம், பொறுமை, ஈகை போன்ற உயர் பண்புகளைப் பயிற்றுவிக்கும் ஒரு கடமை,
  "வெறுமனே உண்ணாமலும் பருகாமலும் இருப்பதல்ல நோன்பு. அது தீமையானவற்றில் இருந்தும் மானக்கேடானவற்றில் இருந்தும் விலகி இருப்பதாகும். நீங்கள் நோன்பிருக்கும் போது யாராவது உங்களோடு தர்க்கித்தால் நான் நோன்பிருக்கின்றேன் என்று சொல்லிவிடுங்கள்" (அல்ஹதீஸ்)

- **ஹஜ்:** அல்லாஹ்வுக்காக மேற்கொள்ளப்பட்ட தியாகத்தையும் சகோதரத்துவம், சமத்துவம், சகிப்புத்தன்மை, புரிந்துணர்வு ஆகிய உயர்குணங்களால் எல்லோரையும் ஒன்றிணைக்கின்றது.
  "எவரேனும் (இஹ்ராம் அணிந்து) ஹஜ்ஜை தன்மீது கடமையாக்கிக் கொண்டால் ஹஜ் (மாதத்தின் பத்தாம் நாள்) வரையில் வீடு கூடுதல், தீச்சொல் பேசுதல், சச்சரவு செய்து கொள்ளுதல் கூடாது..." (2:190)

**(இவைபோன்ற ஐந்து விடயங்கள் சுருக்கமாக விளக்கப்பட்டிருப்பின் 1 x 5 = 5 புள்ளிகள்)**

**(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)**

**7.** பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்குச் சிறுகுறிப்பு எழுதுக.
(i) இமாம் ஷாபிஈ (றஹ்)
(ii) உணவுப்பழக்கம் தொடர்பான இஸ்லாமிய அறிவுரைகள்
(iii) கலீபா அலி (றழி) அவர்களின் ஆளுமைப் பண்புகள்
(iv) இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு முஸ்லிம்களின் பங்களிப்புகள்

(i) இமாம் ஷாபிஈ (றஹ்)

- இவரது இயற்பெயர் முஹம்மத் இப்னு இத்ரீஸ் என்பதாகும்
- இவர் ஹிஜ்ரி 150 இல் பலஸ்தீனின் காஸாவில் பிறந்தார்.
- இவரது சிறப்புப் பெயர் ஆலிமுல் குறைஷ் என்பதாகும்.
- இவரது ஆசிரியர்களுள் பிரதானமானவர்களாக இமாம் மாலிக், இமாம் அபூ யூசுப் போன்றோரைக் குறிப்பிடலாம்.
- இவர் மத்ரஸதுல் அஸர், மத்ரஸதுர் ரஃயு ஆகிய இரு சிந்தனைகளையும் கொண்ட ஒரு இமாமாவார்.
- ஆரம்பத்தில் பக்தாதிலும் பின்னர் எகிப்திலும் முப்தியாக பணியாற்றினார்.
- பக்தாதில் வழங்கிய தீர்ப்புகள் கௌலுல் கதீம் என்றும் எகிப்தில் வழங்கிய தீர்ப்புகள் கௌலுன் ஜதீத் என்றும் கூறப்படும்.
- இவர் ஹிஜ்ரி 204 இல் எகிப்தில் வபாத்தானார்.
- இவரது மத்ஹப் இலங்கை, இன்தோனேஷியா, மலேசியா, எகிப்து போன்ற நாடுகளில் காணப்படுகின்றன.

**(இவை போன்ற ஐந்து கருத்துக்கள் குறிப்பிடப்பட்டிருப்பின்**

**1 x 5 = 5 புள்ளிகள்)**

(ii) உணவுப்பழக்கம் தொடர்பான இஸ்லாமிய அறிவுரைகள்

- ஒரு முஸ்லிம் உணவில் நடுநிலைமையைப் பேண வேண்டும்.
- அளவு கடந்து உண்பதையும் உடலுக்கு ஒவ்வாதவற்றை உட்கொள்வதையும் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.
  "மனிதன் வயிற்றைத் தவிர கெட்ட பாத்திரம் ஒன்றை நிரப்புவதில்லை. சாப்பிட வேண்டும் என்ற நிலை ஏற்பட்டால் மூன்றிலொரு பகுதி உணவுக்கும் மூன்றிலொரு பகுதி நீருக்கும் மூன்றிலொரு பகுதி காற்றுக்கும் வகுத்துக்கொள்ள வேண்டும்" (திர்மிதி)
- உமர் (ரழி) கூறினார்கள், "உண்டும், குடித்தும் வயிற்றை நிரப்புவது பற்றி உங்களை எச்சரிக்கிறேன். வயிறு நிரம்ப உண்பது உடம்பை வீணடிக்கும். நோயை உண்டாக்கும். தொழுகையில் சோம்பலை ஏற்படுத்தும். ஆதலால் அந்த இரண்டிலும் நடுநிலைமையைப் பேணிக்கொள்ளுங்கள். அது உடம்பை சீர்படுத்தி வீண் விரயத்தையும் தவிர்க்கும். நிச்சயமாக அல்லாஹ் கொழுத்த உடல்களை வெறுக்கிறான். மனிதன் மார்க்கத்தைவிட மனோ இச்சையைத் தேர்ந்தெடுத்தால் அழிந்துவிடுவான்". (கன்ஸுல் உம்மால்)
- ஒரு முஸ்லிம் தனது உடலாரோக்கியத்தைக் காத்துக்கொள்ளும் வகையில் தனது உணவுப் பழக்கங்களை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.
- புகைத்தல், போதைப் பொருள் பாவனை போன்றவற்றை முற்றாகவே தவிர்த்துக்கொள்ள வேண்டும். அவை ஹறாமானவை மட்டுமன்றி உடலாரோக்கியத்தையும் சுகவாழ்வையும் இல்லாதொழிக்கும்.
- கோப்பி, தேநீர் போன்ற அனுமதிக்கப்பட்ட உற்சாக பானங்களைக்கூட அளவுக்கதிகமாக உட்கொள்வது உடலாரோக்கியத்தைப் பாதிக்கும்.

**(இவை போன்ற ஐந்து கருத்துக்கள் குறிப்பிடப்பட்டிருப்பின்**

**1 x 5 = 5 புள்ளிகள்)**

(iii) கலீபா அலி (ரழி) அவர்களின் ஆளுமைப் பண்புகள்

- சிறுபராயம் முதலே வீரம் விவேகம் ஆளுமை போன்றவற்றில் சிறப்புற்று விளங்கியமை.
- நபி (ஸல்) அவர்களோடு ஒன்றாக வாழ்ந்த காரணத்தால் ஆரம்ப முதலே இஸ்லாமியப் பணிகளிலும் சமூகப் பணிகளிலும் பங்கேற்கும் வாய்ப்பைப் பெற்றமை.
- மதீனா ஹிஜ்ரத்தின்போது உயிராபத்தைப் பொருட்படுத்தாது நபி (ஸல்) அவர்களுக்குப் பதிலாக அவர்களது படுக்கையில் உறங்கியமை அவர்களது துணிச்சலுக்குச் சிறந்த எடுத்துக் காட்டு.
- சிறந்த குதிரை வீரராகவும் பலசாலியுமாக காணப்பட்டமை.
- இஸ்லாத்தினதும் முஸ்லிம்களதும் பாதுகாப்புக்காக மேற்கொள்ளப்பட்ட அனைத்துப் போர்களிலும் கலந்து கொண்டு தனது வியக்கத்தக்க ஆற்றல்களை வெளிப்படுத்தியமை.
- எத்தகைய பலமிக்க எதிரியாயினும் அவனது சவாலை ஏற்று முன் சென்று தாக்குவதில் தனித்துவம் பெற்றிருந்தமையால் "அல்லாஹ்வின் சிங்கம்" (அஸதுல்லாஹ்) என நபி (ஸல்) அவர்களால் புகழப்பட்டமை.
- பிற்காலங்களில் இஸ்லாத்திற்கெதிரான சவால்கள் முஸ்லிம் உலகிலும் அதன் வெளியிலும் தோற்றம்பெற்ற போது அவற்றைக் கட்டுப்படுத்தி இல்லாதொழித்தமை.
- அறிவில் சிறந்து விளங்கிய அலீ (ரழி) அவர்கள் தமது சிறந்த விவேகத்தையும் ஞானத்தையும் இஸ்லாத்திற்காகச் செலவிட்டமை.
- மார்க்கத்தீர்ப்புக்களை வழங்கிய இவர்கள் நீதிபதியாகவும் செயற்பட்டமை.



[ Downloaded from Past Papers Wiki - Most Extensive Wikipedia of Past Papers! ]

- தனக்கு முன்வந்த அனைத்து கலீபாக்களதும் ஆலோசனை சபைகளில் முக்கிய உறுப்பினராகப் பணியாற்றிய அவர்கள் மிகத் துல்லியமாகவும் பொறுப்புடனும் ஆலோசனைகளும் ஒத்தாசையும் புரிந்து இஸ்லாத்தைப் பாதுகாப்பதிலும் நல்லாட்சி புரிவதிலும் உறுதுணையாக செயலாற்றியுள்ளமை.

(இவை போன்ற ஐந்து கருத்துக்கள் குறிப்பிடப்பட்டிருப்பின்

1 x 5 = 5 புள்ளிகள்)

(iv) இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு முஸ்லிம்களின் பங்களிப்புகள்

- இலங்கையின் வர்த்தகப் பொருட்களை வெளிநாட்டுச் சந்தைகளில் அறிமுகம் செய்தமை: இலங்கையின் மாணிக்கக் கற்கள், யானைத்தந்தம், வாசனைத் திரவியங்கள் முதலியவற்றை வெளிநாடுகளுக்குக் கொண்டு சென்றனர்.
- இலங்கைக்கு வெளிநாட்டு அந்நிய செலாவணியைப் பெற்றுக்கொடுத்தமை: இலங்கையின் ஏற்றுமதிப் பொருட்களை வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து அந்நியச் செலாவணியை ஈட்டிக்கொள்வதற்கு முஸ்லிம்களும் பாரிய பங்களிப்புச் செய்துள்ளனர். அவ்வாறான ஏற்றுமதிப் பொருட்களை மக்கள் உற்பத்தி செய்யத் தொடங்கியதால் நாட்டின் வருமானம் அதிகரித்தது.
- விவசாயத்துறை வளர்ச்சிக்கு பங்காற்றியமை: நாட்டின் விவசாய மேம்பாட்டுக்காக முஸ்லிம்கள் உழைத்ததோடு, உற்பத்தியைப் பெருக்கும் நோக்கில் விவசாயத்தில் ஈடுபட்டனர்.
- நெசவுக் கைத்தொழிலை அறிமுகம் செய்து விருத்தியடையச் செய்தமை: வெளிநாடுகளிலிருந்து நெசவுத் தொழிலாளர்களை அழைத்து வந்து அதனை வளர்க்கப் பாடுபட்டனர்.
- வர்த்தக நடவடிக்கைகளை மேம்படுத்தவென "தவளம்" எனும் வரத்தகப் போக்குவருத்து முறையை அறிமுகம் செய்தமை.
- அரச சபை வர்த்தக ஆலோசகர்களாக முஸ்லிம்கள் செயற்பட்டமை: பொலன்னறுவைக் கால மகா பராக்கிரமபாகு காலத்தில் நான்கு முஸ்லிம்கள் மன்னனுக்கு வர்த்தக நடவடிக்கைகளுக்கு ஆலோசனை வழங்குவோராக செயற்பட்டமையை புவியியலாளர் இத்ரீஸி உறுதிப்படுத்துகின்றமை.
- மன்னர் ஆட்சிக் காலங்களில் ஏற்றிறக்குமதி வர்த்தகத்துக்கு முஸ்லிம் நாடுகளுக்கான தூதுவர்களாக முஸ்லிம்கள் செயற்பட்டமை.

(இவை போன்ற ஐந்து கருத்துக்கள் விளக்கப்பட்டிருப்பின் 1 x 5 = 5 புள்ளிகள்)

(5 + 5 = 10 புள்ளிகள்

PAST PAPERS WIKI

WWW.PastPapers.WiKi

[ Downloaded from Past Papers Wiki - Most Extensive Wikipedia of Past Papers! ]


LOL.lk
BookStore
විභාග ඉලක්ක
පහසුවෙන් ජයගන්න
ඕනෑම පොතක් ඉක්මනින්
නිවසටම ගෙන්වා ගන්න
කෙටි සටහන් | පසුගිය ප්‍රශ්න පත්‍ර | වැඩ පොත් සඟරා | O/L ප්‍රශ්න පත්‍ර |
A/L ප්‍රශ්න පත්‍ර | අනුමාන ප්‍රශ්න පත්‍ර | අතිරේක කියවීම් පොත් |
School Book ගුරු අතපොත්
PADANAMA PUBLICATION
pesuru Prakashana Private Ltd.
Akura Pilot
සමනල දැනුම
සතර
පෙර පාසලේ සිට උසස් පෙළ දක්වා සියළුම ප්‍රශ්න පත්‍ර,
කෙටි සටහන්, වැඩ පොත්, අතිරේක කියවීම් පොත්, සඟරා
සිංහල සහ ඉංග්‍රීසි මාධ්‍යයෙන් ගෙදරටම ගෙන්වා ගැනීමට
www.LOL.lk වෙබ් අඩවිය වෙත යන්න